COMMISSIONER OF MUNICIPAL ADMINISTRATION
17 APR 2017
CHEPAUK, CHENNAI-5.

**சுருக்கம்**

நகராட்சி நிர்வாகம் - தூய்மை இந்தியா திட்டம் . தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளியில் மலம் கழித்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான செலவினங்களை மத்திய மற்றும் மாநில அரசு பங்களிப்புடன் மேற்கொள்ளுதல் – நிர்வாக அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.IV) துறை**

அரசாணை (நிலை) எண். 37

நாள் : 13.04.2017
(திருவள்ளுவர் ஆண்டு 2048,
துன்முகி, பங்குனி – 31)

படிக்க :–

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித ந.க.எண்.26458/2016/தி1 நாள்.20.10.2016.

''''''

**ஆணை:**

தமிழ்நாடு சட்டப் பேரவை விதி எண். 110–இன் கீழ் தமிழகத்தில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் திறந்த வெளியில் மலம் கழித்தலை தடுக்க மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்காக விழிப்புணர்வு பரப்புரையாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் மூலம் திறந்த வெளி மலம் கழித்தலால் ஏற்படும் சுகாதார சீர்கேடு, திடக்கழிவுகளை குறைத்திடும் வழிமுறைகள், திடக்கழிவுகளை மறுசுழற்சி செய்தல் மற்றும் மீண்டும் பயன்படுத்துதல் ஆகியவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்றும், இந்த விழிப்புணர்வு பணிகள் ரூ. 57 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்று அறிவிப்பு செய்யப்பட்டது.

2. 12.07.2016 ல் நடைபெற்ற தூய்மை இந்தியா திட்டம் செயற்குழுக் கூட்டத்தில், 2016-17-ஆம் ஆண்டு செலவினத் தொகையான ரூ.5697.88 இலட்சத்தில் 75% மத்திய அரசின் பங்கீடாக ரூ.4273.41 இலட்சத்திற்கும், 25% மாநில அரசின் பங்கீடாக ரூ.1424.47 இலட்சத்திற்கும் மேற்கொள்ள பரிந்துரைத்து ஒப்புதல் வழங்கியது.

3. நகராட்சி நிர்வாக ஆணையர், இது குறித்து அரசிற்கு அனுப்பிய செயற்குறிப்பில், 12.07.2016 அன்று நடைபெற்ற தூய்மை இந்தியா திட்ட மாநில உயர்மட்ட குழு கூட்டம் பொருள்–8 இல், பொது மக்களிடம் சுகாதார விழிப்புணர்வு மற்றும் பிரச்சார இயக்கத்தை மேற்கொள்வதற்காக கீழ்க்கண்ட எண்ணிக்கையில் பரப்புரை பணியாளர்கள்,

மண்டல மேற்பார்வையாளர், ஒருங்கிணைப்பாளர்களை பயன்படுத்திக் கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

| உள்ளாட்சி அமைப்புகளின் வகைகள் | உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை | வார்டுகளின் எண்ணிக்கை | பரப்புரையாளர் எண்ணிக்கை | மண்டல மேற்பார்வை யாளர் எண்ணிக்கை | ஒருங்கிணைப்பாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| பெருநகர சென்னை மாநகராட்சி | 1 | 200 | 200 | 15 | திட்ட செயல்பாட்டு அலகின் விழிப்புணர்வு உத்தி சிறப்பு அலுவலர் |
| மற்ற மாநகராட்சிகள் | 11 | 719 | 360 | 45 | 11 |
| நகராட்சிகள் | 124 | 3613 | 904 | 170 | 0 |
| பேரூராட்சிகள் | 528 | 8288 | 1382 | 0 | 0 |
| **மொத்தம்** | **664** | **12820** | **2846** | **230** | **11** |

4. மேலும், பரப்புரையாளர், மண்டல மேற்பார்வையாளர், ஒருங்கிணைப்பாளர்களை பயன்படுத்திக் கொள்ள அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்படவுள்ள செலவின விவரங்கள் மற்றும் விழிப்புணர்வு பணி செயல் திட்டத்தில், பரப்புரையாளர்கள், மேற்பார்வையாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கான பயிற்சி மற்றும் விளம்பரப் பணிகளுக்கான செலவின விவரங்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார் :–

I. <u>பரப்புரையாளர், மண்டல மேற்பார்வையாளர், ஒருங்கிணைப்பாளர்</u>

| உள்ளாட்சி அமைப்புகளின் வகைகள் | பரப்புரையாளர்கள் | | | மண்டல மேற்பார்வையாளர்கள் | | | ஒருங்கிணைப்பாளர்கள் | | | மொத்த தொகை (4+7+10) ( ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | ஆண்டொன்றுக்கு கணக்கிடப்பட்ட தனிநபர் சன்மானம் (ரூ. லட்சத்தில்) | 2016–17–ஆம் ஆண்டிற்கு கணக்கிடப்பட்ட மொத்த தொகை (ரூ. லட்சத்தில்) | எண்ணிக்கை | ஆண்டொன்றுக்கு கணக்கிடப்பட்ட தனிநபர் சன்மானம் (ரூ. லட்சத்தில்) | 2016–17–ஆம் ஆண்டிற்கு கணக் கிடப்பட்ட மொத்த தொகை (ரூ. லட்சத்தில்) | எண்ணிக்கை | ஆண்டொன்றுக்கு கணக் கிடப்பட்ட தனிநபர் சன்மானம் (ரூ. லட்சத்தில்) | 2016–17–ஆம் ஆண்டிற்கு கணக்கிடப்பட்ட மொத்த தொகை (ரூ. லட்சத்தில்) | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| பெருநகர சென்னை மாநகராட்சி | 200 | 1.45 | 290.00 | 15 | 2.60 | 39.00 | 0 | 0 | 0 | 329.00 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இதர மாநகராட்சிகள் | 360 | 1.45 | 522.00 | 45 | 2.60 | 117.00 | 11 | 2.88 | 31.68 | 670.68 |
| நகராட்சிகள் | 904 | 1.45 | 1310.80 | 170 | 2.60 | 442.00 | 0 | 0 | 0 | 1752.80 |
| பேரூராட்சிகள் | 1382 | 1.45 | 2003.90 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 2003.90 |
| மொத்தம் | 2846 | | 4126.70 | 230 | | 598.00 | 11 | | 31.68 | 4756.38 |

## II. பயிற்சி மற்றும் விளம்பரப் பணிகளுக்கான செலவின விவரம் :-

| வ. எண். | செயல்படுத்தும் நபர் / பணியின் பெயர் | செயல்படுத்தும் நபர் / பணி எண்ணிக்கை | ஆண்டு ஒன்றுக்கு தனி நபர் மற்றும் பணி செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) | 2016–17–ம் ஆண்டிற்கான மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | மேற்பார்வையாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கான பயிற்சி (காலாண்டு அடிப்படையில்) | 241x4 | ஒரு நபருக்கு ரூ. 300/– வீதம் | 2.89 |
| 2. | பரப்புரையாளகளுக்கு மேற்பார்வையாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் மூலமாக பயிற்சி (காலாண்டு அடிப்படையில்) | 2846x4 | ஒரு நபருக்கு ரூ. 100/– வீதம் | 11.38 |
| 3. | விளம்பர தட்டிகள், சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள், ஒட்டு விளம்பர பிரசுரங்கள் (Stickers) | 2846 (பரப்புரையாளர் ஒருவருக்கு 5 தொகுப்பு வீதம்) | ஒரு தொகுப்புக்கு ரூ. 100/– வீதம் | 14.23 |
| 4. | அச்சு மற்றும் மின்னணு ஊடகம் மூலம் விளம்பர பணி (வெளிநபர் மூலம் Outsourcing) | 10 எண்ணிக்கையில் 52 வாரங்கள் | வாரம் ஒன்று ரூ. 10,00 /– வீதம் | 52.00 |
| 5. | நிகழ்நிலை செயலாக்கம் (ஒரு உள்ளாட்சிக்கு ஒன்று வீதம்) | 664 (பெருநகர சென்னை மாநகராட்சி –1<br>இதர மாநகராட்சிகள்–11<br>நகராட்சிகள்–124<br>பேரூராட்சிகள் –528) | ---- | 841.00 |
| 6. | காண் கேள் சாதனம் மூலம் விளம்பரம் (Video Media clips) | 10 விளம்பரம் | விளம்பரம் ஒன்றுக்கு ரூ. 2.00 இலட்சம் வீதம் | 20.00 |
| | மொத்தம் | | | **941.50** |

மொத்த செலவினம்: ரூ. 5697.88 லட்சம்

நகராட்சி நிர்வாக ஆணையர், விழிப்புணர்வு பணிகள் தொடர்பான பயிற்சி மேற்கொள்ள மற்றும் விளம்பரம் தொடர்பான செலவினத் தொகையான ரூ.941.50 இலட்சத்தில், மத்திய அரசின் பங்கீடான 75% தொகை ரூ.706.13 இலட்சமும், மாநில அரசின் பங்கீடாக 25% தொகை ரூ.235.37 இலட்சமும் செலவினம் மேற்கொள்ள அனுமதி அளிக்கவும், பரப்புரையாளர்கள்,

மண்டல மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களை பயன்படுத்திக்கொள்ள ரூ.4756.38 இலட்சத்திற்கு கீழ்க்காணும் விவரங்களின்படி உள்ளாட்சி அமைப்புகளில் செலவினம் மேற்கொள்ளவும், இவற்றில் மத்திய அரசின் பங்கீடான 75% க்கு ரூ. 3567.28 இலட்சமும், மாநில அரசின் பங்கீடான 25%க்கு ரூ.1189.10 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.5697.88 லட்சத்திற்கு (மத்திய அரசு பங்கீடு ரூ. 4273.41 லட்சம் + மாநில அரசு பங்கீடு ரூ.1424.47 லட்சம்) 2016–17ஆம் ஆண்டில் செலவினம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்:-

| உள்ளாட்சி அமைப்புகளின் வகைகள் | விவரம் | அனுமதி வேண்டப்படும் செலவினம் (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| பெருநகர சென்னை மாநகராட்சி | பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வை யாளர்களை ஒப்பந்த புள்ளி அடிப்படையில் அந்த மாநகராட்சி பகுதியை சார்ந்தவர்களை / மகளிர் சுயஉதவி குழுக்களை பயன்படுத்திக் கொள்ள மாநகராட்சி ஆணையர்களுக்கு அனுமதி அளித்தல். | 329.00 |
| இதர மாநகராட்சிகள் | பரப்புரையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களை ஒப்பந்த புள்ளி அடிப்படையில் அந்தந்த மாநகராட்சி பகுதியை சார்ந்தவர்களை/மகளிர் சுயஉதவி குழுக்களை பயன்படுத்திக் கொள்ள மாநகராட்சி ஆணையர்களுக்கு அனுமதி அளித்தல். | 670.68 |
| நகராட்சிகள் | பரப்புரையாளர்கள், மற்றும் மேற் பார்வையாளர்கள் ஒப்பந்த புள்ளி அடிப்படையில் அந்தந்த நகராட்சி பகுதியை சார்ந்தவர்களை / மகளிர் சுயஉதவி குழுக்களை பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்களுக்கு அனுமதி அளித்தல். | 1752.80 |
| பேரூராட்சிகள் | பரப்புரையாளர்கள், ஒப்பந்த புள்ளி அடிப்படையில் பேரூராட்சி பகுதியை சார்ந்தவர்களை / மகளிர் சுயஉதவி குழுக்களை பயன்படுத்திக் கொள்ள ஏ்துவாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களுக்கு அனுமதி அளித்தல். | 2003.90 |
| **மொத்தம்** | | **4756.38** |

5. மேற்காணும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதன்படியும், உயர்மட்டக் குழு பரிந்துரையின்படியும் மேலே பத்தி 3 ல்

காணும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை ஏற்று, தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளியில் மலம் கழித்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கு 2016–17–ஆம் ஆண்டிற்கான செலவினம் ரூ.5697.88 இலட்சம் (ரூபாய் ஐந்தாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஏழு இலட்சம் எண்பத்தெட்டாயிரம் மட்டும்) (மத்திய அரசு பங்கீடு ரூ.4273.41 இலட்சம் + மாநில அரசு பங்கீடு ரூ.1424.47 இலட்சம்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணை, நிதித்துறையின் அ.சா.எண். 16135/17, நாள் 30.03.2017 ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. பணீந்திர ரெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை– 600 005.
ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 600 108.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை – 108.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
மாநில தலைமை கணக்காயர், சென்னை- 18/35
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.

<u>நகல்</u>:-
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, அவர்களின் முதுநிலை நேர்முக செயலாளர், சென்னை – 9.
சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.2, ந.நி.3 ந.நி.5, கு.வ.1, அ.ந.2, வ.செ.2) துறை, சென்னை – 9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை – 9.
உபரி / இருப்புக்கோப்பு

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்
13/4